# TNPSC GROUP II PRELIMS TEST -2018

# TEST NO -1, 7th Tamil

1) "கல்விக்கு எல்லை இல்லை" என்ற தனிப்பாடல் திரட்டுப் பாடலை பாடியவர்.

a) ஔவையார் b) கபிலர்

c) இராமச்சந்திரக் கவிராயர் d) கவி காளமேகம்

2) "இராமானுஜன் முதல் தரமான கணித மேதை"-என்று கூறியவர்.

a) ஆர்தன் பெர்சி b) லார்ட்மெண்ட் லண்ட்

c) சூலியன் கக்சுலி d) இந்திரா காந்தி

3) "திராவிட மொழிகளின் தாய் தமிழ்"- என உலகிற்குப் பறைசாற்றியவர்

a) கால்டுவெல் b) எமினோ

c) கமில் சுவலபில் d) அகத்தியலிங்கம்

4) இயல்பான பெயர் பயனிலையைக் கொண்டு முடியும் வேற்றுமை.

a) விளி வேற்றுமை b) இரண்டாம் வேற்றுமை

c) முதல் வேற்றுமை d) ஆறாம் வேற்றுமை

5) நற்றினை, குறுந்தொகை, புறநானூறு, திருவள்ளுவமாலை ஆகியவற்றில் கோவிலூர்கிழார் இயற்றிய பாடல்களின் எண்ணிக்கை

a) பதினெட்டு b) பதினாறு

c) பதினொன்று d) பத்து

6) பல்லவர் கால ஓவியங்கள் சிதைந்த தோற்றத்துடன் காணப்படும் இடம்

a) திருவரங்கம் b) திருவாரூர்

c) பிள்ளையார்பட்டி d) மாமண்டூர்

7) 'பறழ்' என்ற இளமைப்பெயர் தொடர்புடைய விலங்கு

a) கரடி b) சிங்கம்

c) புலி d) பானை

8) 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை'- இக்கூற்றைக் கூறியவர்.

a) பாரதிதாசன் b) பாரதியார்

c) சுத்தானந்த பாரதி d) பெருஞ்சித்திரனார்

9) தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளை கவிதை வடிவில் தந்தவர்

a) கண்ணதாசன் b) பாரதிதாசன்

c) வாணிதாசன் d) பட்டுக்கோட்டையார்

10) இலக்கிய வகைப்படி சொற்கள் எத்தனை வகைப்படும்?

a) எட்டு b) ஆறு

c) நான்கு d) இரண்டு

11) திருப்பனந்தாளிலும், காசியிலும் தம் பெயரால் மடம் நிறுவி காசியில் இறைவனது திருவடியை அடைந்தவர்.

a) அப்பர் b) திருஞான சம்பந்தர்

c) மாணிக்கவாசகர் d) குமரகுருபரர்

12) பின்வரும் நூல்களுள் அசலாம்பிகை அம்மையாரால் எழுதப்படாத நூலைத் தேர்ந்தெடுக்க

a) குழந்தை சுவாமிகள் சரிதம் b) திலகர் புராணம்

c) திலகர் சரிதம் d) குழந்தை சுவாமிகள் சரிதம்

13) இலக்கணக் குறிப்பு தருக. பாய்புனல்

a) பண்புத் தொகை b) வினைத்தொகை

c) உம்மைத்தொகை d) எண்ணும்மை




14) இதழியலின் **Bulletin** என்பது

a) தலையங்கம் b) சிறப்புச் செய்தி

c) சிறப்புச் செய்தி இதழ் d) பொய் செய்தி

15) உப்பங்கழிகளில் பூக்கும் மலர்

a) வள்ளைப்பூ b) நெய்தல் பூ

c) தாமரை d) அல்லி

16) "தென்னாட்டின் ஜான்சிராணி"- என அழைக்கப்படுபவர்

a) அஞ்சலையம்மாள் b) அம்புஜத்தம்மாள்

c) வேலுநாச்சியார் d) மங்கம்மாள்

17) சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை என்ற அரசனால் கவரி வீசப்பெற்ற பெருமைக்குரியவர்.

a) நல்லாதனார் b) திருத்தக்கத்தேவர்

c) மோசிக்கீரனார் d) கம்பர்

18) பின்வரும் தமிழறிஞர்களுள் யாரை 'சூலியல் வின்சோன்' பாராட்டினார்.

a) பரிதிமாற் கலைஞர் b) கவிமணி

c) மறைமலையடிகள் d) உ.வே.சா.

19) "தமிழ் பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்குவது மட்டுமின்றித் தழைத் தோங்கவும் செய்யும்"- என்று கூறியவர்

a) பரிதிமாற் கலைஞர் b) கிரெனல்

c) கால்டுவெல் d) பாவாணர்

20) தமிழ் இலக்கியங்களில் சைவ இலக்கியத்தின் மீது அதிக பற்றுக் கொண்டவர்

a) உ. வே. சா b) மீனாட்சி சுந்தரனார்

c) பரிதிமாற்கலைஞர் d) சவரிராயலு

21) ஓங்க விடை வந் துயர்ந்தோர் தொழ விளங்கி-
என்னும் பாடல் இடம்பெற்றுள்ள நூல்

a) தொல்காப்பியம் b) நன்னூல்

c) புறநானூறு d) தண்டியலங்காரம்

22) யார் காப்பார் என்று தமிழன்னை ஏங்கிய போது நான் காப்பேன் என்று எழுந்த ஒருவர்

a) மீனாட்சி சுந்தரனார் b) உ. வே. சா

c) பாரதியார் d) திரு. வி. க.

23) ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் வாழ்கின்றோம். ஒரு சொல் கேளீர்- என்று பாடியவர்

a) பாரதிதாசன் b) பாரதியார்

c) கவிமணி d) சுரதா

24) கால்டுவெல் இயற்கை எய்திய ஆண்டு

a) 1891 b) 1981

c) 1861 d) 1871

25) பொருந்தா ஒன்றைத் தேர்வு செய்க. இயல்பு நவிற்சியணி

a) தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்

b) தென்னைமரம் உயரமானது

c) தாய் மொழி இனிமையானது

d) வான் புகழ் கொண்ட தமிழ்நாடு

26) இராமானுஜம் கணித அறிவியல் நிறுவனம் நிறுவப்பட்டுள்ள இடம்

a) சென்னை b) மும்பை

c) புதுடெல்லி d) புனே

27) ஏறு தழுவுதல் என்ற வீரவிளையாட்டு நடைபெற்ற நிலம்

a) மருதம் b) நெய்தல்

c) பாலை d) முல்லை

28) "தான் வழங்கும் நாட்டின் கண் உள்ள பல மொழிகட்கும் தலைமையாக உள்ள தகுதியும், அவற்றிலும் மிக்க மேன்மை உடையதுமான மொழியே உயர் தனிச் செம்மொழி"- இது யாருடைய கூற்று

a) பரிதிமாற்கலைஞர் b) பாவாணர்

c) திரு. வி. க. d) மணவை முஸ்தபா

29) "தென்னிந்தியாவின் ஏதென்ஸ்" என்றழைக்கப்படும் நகரம்

a) சென்னை b) கோவை
c) நெல்லை d) மதுரை

30) கோடிட்ட இடத்தை நிரப்புக.

சங்க காலத்தில் வரைந்த ஓவியங்களை-------------- என்றே பெயரிட்டு அழைத்தனர்.

a) ஓவியம் b) கோட்டோவியம்
c) சித்திர எழுத்து d) கண்ணெழுத்து

31) ஹிட்லரை மன்னிப்புக் கேட்க செய்த தமிழர்

a) பெரியார் b) முத்துராமலிங்கர்
c) செண்பகராமன் d) ம. பொ. சி

32) பின்வருவனவற்றுள் எழுத்துத் தொடர்மொழி எது?

a) வீடு b) கை
c) தை d) பூ

33) 'வேன்மிகுதானை வேந்தர்க்குக் கடனே' என்ற புறநானூற்றுப் பாடலைப் பாடியவர்

a) காரியாசான் b) மோசிக்கீரனார்
c) கம்பர் d) ஔவையார்

34) ஓவியக் கலைக்கெனத் தனி இலக்கண நூல்கள் இருந்தன என்பதனை அறிந்து கொள்ள உதவும் நூல்

a) சிலப்பதிகாரம் b) மணிமேகலை
c) சீவகசிந்தாமணி d) வளையாபதி

35) ஆடு மாடுகள் அடைக்கப்படுமிடம்

a) கூடம் b) பட்டி
c) பண்ணை d) கொட்டில்

36) முதல் இரு சங்கத்திலும் வழங்கிய இலக்கண நூல்கள் எதைப்பற்றியனவாக இருந்தது?

a) இசைத்தமிழ் b) நாடகத்தமிழ்
c) இயற்றமிழ் d) முத்தமிழ்

37) திரு. வி. க அவர்கள் தமிழாசிரியராகப் பணியாற்றிய பள்ளி அமைந்திருந்த இடம்

a) வண்ணாரப் பேட்டை b) குரோம்பேட்டை
c) இராயப்பேட்டை d) ஆழ்வார்பேட்டை

38) எல்லாவிளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு- இக்குறளில் பயின்று வரும் அணி

a) உருவக அணி b) உவமை அணி
c) தற்குறிப்பேற்ற அணி d) சொற்பொருள் பின்வருநிலையணி

39) எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன என்பது ---------- நூற்பா

a) நன்னூல் b) தொல்காப்பியம்
c) அகத்தியம் d) திருக்குறள்

40) புறநானூறு தொகுக்கப்பட்ட காலம்

a) கி.பி. இரண்டாம் நூற்றாண்டு

IYACHAMY ACADEMY CHENNAI
Your Future Our Mission
WWW.IYACHAMY.COM

b) கி.பி. மூன்றாம் நூற்றாண்டு

c) கி.பி. நான்காம் நூற்றாண்டு

d) கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு

41) பின்வருபவர்களில் மதுரைக் கூடலூர் கிழாரின் பாடல்களை மேற்கோளாக எடுத்துக்காட்டியவர்

a) ஒட்டக்கூத்தர் b) பரிமேலழகர்

c) நச்சினார்க்கினியர் d) கபிலர்

42) பொய்யாமை அன்ன புகழ் இல்லை- என்ற தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு தருக.

a) குணப்பெயர் b) காரியவாகுபெயர்

c) கருத்தாவாகுபெயர் d) குணவாகுபெயர்

43) நெடுங்கிள்ளி நலங்கிள்ளியின் ஒன்றன் என்று எப்புலவரைக் கருதினான்?

a) கோவூர் கிழார் b) மோசிகீரனார்

c) மருதன் இள நாதனார் d) இளந்தத்தனார்

44) காரணம் கருதி இடப்பட்ட பெயர் பொதுவாய் உள்ள எல்லாப் பொருள்களுக்கும் வழங்கப்படுமாயின் அது என்ன பெயர்?

a) காரணப் பொதுப்பெயர் b) காரணப்பெயர்

c) இடுகுறிப் பெயர் d) இடுகுறி சிறப்புப் பெயர்

45) திருவாரூர் நான்மணிமாலை எத்தனை பாடல்களை உடையது?

a) அறுபது b) ஐம்பது

c) நாற்பது d) முப்பது

46) விதை நெல்லை முதலில் நாற்றங்காலில் விதைத்து எத்தனை நாள் வரை வளர்ப்பர்?

a) 31-35 நாள் வரை b) 21-25 நாள் வரை

c) 11-15 நாள் வரை d) 41-45 நாள் வரை

47) ஐந்தாம் வேற்றுமையின் உருபுகளைத் தேர்வு செய்க.

a) கண், உள் b) கீழ், மேல்

c) இன், இல் d) ஐ, கு

48) பொருத்தமற்ற இணையைத் தேர்வு செய்க.

a) உஷார்-விழிப்பு b) ஆதவன்-சூரியன்

c) எதார்த்தம்-இயல்பு d) ஆரம்பம்-தொடக்கம்

49) காவிரி ஆற்றின் இரு கரைகளிலும் வாழ்ந்த சோழ நாட்டு மக்கள் அவ்வாற்றில் புதுவெள்ளம் வரும்பொழுது கொண்டாடி மகிழும் விழா.

a) இந்திர விழா b) கவேரி விழா

c) புனல் விழா d) கோவில் திருவிழா

50) இனமுள்ள அடைமொழியைத் தேர்ந்தெடுக்க.

a) வெண்முகில் b) கருநிலவு

c) வெண்காக்கை d) கருங்காக்கை

51) அரங்கு இழைத்து நெல்லிக் காய்களை வைத்து நகர்த்தி ஆடும் ஆட்டம்.

IYACHAMY ACADEMY CHENNAI Your Future Our Mission WWW.IYACHAMY.COM

a) அம்மானை b) ஓரையாட்டம்
c) வட்டாடுதல் d) கழங்கு

52) அகரவரிசைப்படி சொற்களை சீர் செய்க.
a) பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்.
b) பகுதி, விகுதி, சந்தி, இடைநிலை, சாரியை, விகாரம்.
c) சந்தி, சாரியை, இடைநிலை, விகாரம், பகுதி, விகுதி
d) இடைநிலை, சந்தி, சாரியை, பகுதி, விகாரம், விகுதி

53) மனிதன் நாகரிகம் அடைவதற்கு முதற்கருவியாக விளங்கியது
a) கல்வி b) மொழி
c) ஆடை d) பணம்

54) ஏறு தழுவுதலின் போது முழங்கப்படும் போர் இசைக்கருவி
a) முரசு b) தவில்
c) நாதசுரம் d) மத்தளம்

55) சீவக சிந்தாமணியின் வேறு பெயர்களில் பொருத்தமற்றது
a) மணநூல் b) காமநூல்
c) முக்திநூல் d) தெய்வநூல்

56) திருநந்திக்கரையில் கிடைக்கப்பெற்ற ஓவியங்கள் யாருடைய காலத்தைச் சேர்ந்தவை
a) பல்லவர்கள் b) சேரர்கள்
c) சோழர்கள் d) பாண்டியர்கள்

57) வண்ணமிடும் போதும் தடித்த எழுத்துக்களில் எழுதும் போதும் அடிக்கோடு இடும் போதும் இக்குறி இடத்தேவையில்லை
a) இரட்டை மேற்கோள் குறி b) ஒற்றை மேற்கோள் குறி
c) உணர்ச்சி குறி d) வினாக்குறி

58) அம்மானைப் பாடலில் போற்றப்படும் தெய்வம்
a) நான்முகன் b) விநாயகர்
c) முருகன் d) சிவன்

59) அறிஞர் அண்ணா அவர்களால் தமிழகத்தின் அன்னிபெசண்ட் என்று அழைக்கப்பட்டவர் யார்?
a) தர்மாம்பாள் b) முத்துலெட்சுமி ரெட்டி
c) வள்ளியம்மை d) மூவலூர் இராமாமிருதம்

60) ஆமூர் மல்லனுக்கும் நற்கிள்ளிக்கும் இடையே நடைபெற்ற வீர விளையாட்டை விவரிக்கும் நூல்
a) நற்றினை b) குறுந்தொகை
c) புறம் d) பதிற்றுப்பத்து

61) பன்னிரண்டு இராசிகளையும் விண்மீன்களையும் வரைந்த செய்தியைக் கூறும் நூல்
a) நெடுநல்வாடை b) மலைபடுகடாம்
c) சிறுபாணாற்றுப் படை d) நற்றிணை

62) கீழ்க்கண்டவற்றுள் செயல்பாட்டு வினை வாக்கியத்தைத் தேர்ந்தெடு.

IYACHAMY ACADEMY CHENNAI Your Future Our Mission WWW.IYACHAMY.COM

a) கர்ணன் கொடை அளித்தார்

b) தேன்மொழி கண்ணீர் வடித்தாள்

c) திருவள்ளுவர் திருக்குறள் படத்தார்

d) திருக்குறள் திருவள்ளுவரால் எழுதப்பட்டது.

63) புரோச் நகரில் நடைபெற்ற இரண்டாவது கல்வி மாநாடு நடைபெற்ற ஆண்டு

a) 1917 b) 1927

c) 1817 d) 1937

64) பள்ளிக்கூடம் வீட்டைப் போன்று இருத்தல் வேண்டும் என்று கூறியவர்

a) ஜவஹர்லால் நேரு b) மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி

c) திரு. வி. க. d) டாக்டர் மு.வ.

65) தமிழில் மிகுதியாக உள்ள பெயர்கள்

a) காரணப் பெயர்கள் b) இடுகுறிப்பெயர்கள்

c) காரணச் சிறப்புபெயர்கள் d) இடுகுறிச் சிறப்புபெயர்கள்

66) பின்வருவனவற்றுள் சிறப்புப் பொருத்தத்திற்கு உரிய தொடரைத் தேர்வு செய்க.

a) முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா

b) அவன் பாடம் படித்தான்

c) வண்டுகள் தேன் குடித்தன

d) கோலமயில் ஒயிலாக ஆடியது

67) குமரகுருபரரின் நூல் பட்டியலில் பொருந்தாத நூல்

a) மதுரைக் கலம்பகம் b) நந்திக்கலம்பகம்

c) கந்தர் கலி வெண்பா d) நீதிநெறி விளக்கம்

68) கற்பிப்போர் கண் கொடுப்போரே!- என்று பாடியவர்

a) பாரதிதாசன் b) கண்ணதாசன்

c) பாரதியார் d) வாணிதாசன்

69) மதுரைக்குக் காவலால் அமைந்த நான்கு கோவில்களில் பொருந்தாத ஒன்று.

a) ஆலவால்க் கோவில் b) கன்னி கோவில்

c) கரியமால் கோவில் d) அய்யனார் கோவில்

70) "தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை"- என்று பாடிய புலவர்

a) இளங்கோவடிகள் b) கடியலூர் உருத்திரங்கண்ணனார்

c) நல்லூர் நத்தத்தனார் d) சீத்தலை சாத்தனார்

71) திருட்செந்தில் கலம்பகம் பாடியவர் யார்?

a) மீனாட்சி சுந்தரனார் b) குமரகுருபரர்

c) கலம்பக இரட்டையர்கள் d) சுவாமிநாத தேசிகர்

72) பூக்களில் சிறந்த பூ பருத்திப்பூ என்று கூறியவர்

a) காந்தியடிகள் b) திரு. வி. க

c) பெரியார் d) அறிஞர் அண்ணா

73) தவறான இணையைத் தேர்ந்தெடு.

a) மலர்-கொய் b) இலை-பறி

IYACHAMY ACADEMY CHENNAI
Your Future Our Mission
WWW.IYACHAMY.COM

c) பாட்டு-படி d) பழம்-தின்

74) "அறம் பெருகும் தமிழ்படித்தால் அகத்தில் ஒளிபெருகும் திறம் பெருகும் உரம்பெருகும் தீமைக்கெதிர் நிற்கும்"- என்று பாடியவர்

a) பெருஞ்சித்திரனார் b) வள்ளலார்
c) குமரகுருபரர் d) திரு. வி. க.

75) பொருந்தா ஒன்றைத் தேர்வு செய்க.

a) வட்டிகைப் பலகை b) துகிலிகை
c) வட்டிகைச் செய்தி d) தூரிகை

76) இந்நூலைக் கற்பதனால் கற்போரின் மனத்திலுள்ள அறியாமையாகிய நோயைப் போக்கி அவரைக் குன்றின் மேலிட்ட விளக்காக சமுதாயத்தில் விளங்கச் செய்யும்

a) சிறுபஞ்ச மூலம் b) நான்மணிக்கடிகை
c) தமிழ்விடுதூது d) கலிங்கத்துப்பரணி

77) நாடகப் பாங்கில் அமைந்த சிற்றிலக்கிய வகை நூல்

a) குற்றாலக்குறவஞ்சி b) முக்கூடற்பள்ளு
c) தமிழ்விடுதூது d) கலிங்கத்துப்பரணி

78) பொருந்தா ஒன்றைத் தேர்வு செய்க.

a) செந்தாமரை b) வெண்காக்கை
c) கருநிலவு d) தமிழ்ப்பாடநூல்

79) பொருத்துக.

a) மயிலுக்குப் போர்வை - நள்ளி
b) இல்லறத்திற்குப் பொருள் - அதியமான்
c) கூத்தார்க்கு நாடு - பேகன்
d) புலவர்க்கு நெல்லிக்கனி - ஓரி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

80) திருக்குறள் எத்தனை மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது?

a) 107 b) 108
c) 106 d) 105

81) கோவூர் கிழாரால் சிறைமீட்கப்பட்ட புலவர்

a) இளங்கௌதமனார் b) இளந்தத்தனார்
c) இளங்குமணன் d) இளம்பூரணார்

82) தவறான ஒன்றைத் தேர்ந்தெடு.

a) அதமம் b) தர்மம்
c) உத்தமம் d) மத்திமம்

IYACHAMY ACADEMY CHENNAI Your Future Our Mission WWW.IYACHAMY.COM

83) கூன்பாண்டியன் காலத்தில் மங்கையர்க்கரசி குலச்சிறையார் உதவியுடன் சைவத்தைக் காத்தவர்

a) அப்பர் b) சுந்தரர்

c) சம்பந்தர் d) மாணிக்கவாசகர்




84) உழவுத்தொழிலுக்கு நிகரான தொழில் உலகில் இல்லை என்று கூறிய கவிஞர்

a) உடுமலை நாராயணகவி b) கம்பர்

c) வாணிதாசன் d) மருதகாசி

85) பாண்டித்துரைத் தேவர் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை தோற்றுவித்த ஆண்டு

a) 1801 செப்டம்பர் 14 b) 1901 அக்டோபர் 14

c) 1901 செப்டம்பர் 14 d) 1911 அக்டோபர் 14

86) பாரதிக்குப் பின் கவிதை மரபில் திருப்பம் விளைவித்தவை இவருடைய கவிதைகள்

a) பாரதிதாசன் b) அரங்கசாமி

c) பட்டுக் கோட்டையார் d) வேங்கட மகாலிங்கம்

87) யாருடைய காலத்தில் ஓவியக்கலை நன்கு வளர்ச்சி அடைந்தது?

a) பல்லவர்கள் b) தஞ்சை மராத்தியர்கள்

c) பாண்டியர்கள் d) சோழர்கள்

88) துன்பத்தையும் நகைச்சுவையோடு சொல்வதில் வல்லவர்

a) பகுத்தறிவுக் கவிராயர் b) காளமேகம்

c) இராமச்சந்திர கவிராயர் d) அறிஞர் அண்ணா

89) திருச்சி மலைக்கோட்டையில் உள்ள சிற்பங்களில் காண்போரைக் கவர்ந்திழுக்கும் சிற்பங்கள் யாருடைய காலத்தவை?

a) பல்லவர் b) சேரர்

c) சோழர் d) பாண்டியன்

90) இலங்கை மன்னன் பரராச சேகரனைப் பாடி ஒரு யானை பொற்பந்தம் ஊர் ஆகியவற்றை பரிசாகப் பெற்றுவந்தவர்

a) கவி காள மேகம் b) இராமச்சந்திரக் கவிராயர்

c) அந்தகக்கவி வீரராகவர் d) பலபட்டடை சொக்கநாதர்

91) தமிழர் வளர்த்த நுண்கலைகளின் வரிசையில் முன்னணியில் நிற்பது

a) சிற்பக்கலை b) ஓவியக்கலை

c) நடனக்கலை d) ஆடல்கலை

92) தஞ்சைப்பெரிய கோவிலில் காணப்படாத ஓவியத்தைத் தேர்ந்தெடுக்க.

a) தாமரைத்தடாகம் b) நாட்டிய மகளிர்

c) சுந்தரர் கயிலை செல்லும் காட்சி d) கவின் மிகு கயிலைக்காட்சி

93) பொருத்துக.

a) பொங்கல் வழிபாடு - இரா.பி. சேதுப்பிள்ளை

b) தமிழின்பம் - க. கௌ. முத்தழகர்

c) தூரத்து ஒளி - கம்பர்

d) உழவன் சிறப்பு - ந. பிச்சமூர்த்தி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 3 | 1 | 4 ` | 2 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

94) மத்த விலாசம் என்னும் நாடக நூலை எழுதியவர்

a) இராஜராஜ சோழன் b) இராஜேந்திர சோழன்

c) நந்திவர்மன் d) மகேந்திரவர்மன்

95) தமிழகத்தை எழுபத்திரண்டு பாளையங்களாகப் பிரித்து ஆட்சி செய்தவர்கள்

a) நாயக்கர்கள் b) பாண்டியர்கள்

c) சேரர்கள் d) சோழர்கள்

96) தமிழகத்தின் வோர்ட்ஸ்வர்த் என்று பாராட்டப் பெறுபவர்?

a) சுரதா b) வாணிதாசன்

c) பாரதிதாசன் d) சிற்பி

97) 'மணநூல்' இந்நூலின் ஆசிரியர் யார்?

a) இளங்கோவடிகள் b) திருவள்ளுவர்

c) சீத்தலைச் சாத்தனார் d) திருத்தக்கதேவர்

98) வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே எனப் பாடியவர்

a) கவிமணி b) பாரதிதாசன்

IYACHAMY ACADEMY CHENNAI Our Mission Your Future WWW.IYACHAMY.COM

c) பாரதியார் d) நாமக்கல் கவிஞர்

99) எளிய மக்களை நோக்கிக் கவிதைக் கருவியைத் திருப்பி அமைத்த பெருமை யாரைச் சாரும்?

a) பாரதிதாசன் b) கவிமணி

c) பாரதியார் d) நாமக்கல் கவிஞர்

100) "பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே"- எனும் பாடலடிகள் யாருடையது

a) கவிமணி b) புரட்சிக் கவிஞர்

c) காந்தியக்கவிஞர் d) தேசியக்கவி

IYACHAMY ACADEMY CHENNAI
Your Future Our Mission
WWW.IYACHAMY.COM